# வரலாறு

# தரம் 8 அலகு 2 கண்டி இராச்சியம்

## 2.0 கண்டி இராச்சியம்

- 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் செங்கடகல நகரை மையமாகக் கொண்டு உருவாகியது.
- 1815 ஆம் ஆண்டுவரை இலங்கையின் சுதந்திரமான இராசதானியாக இருந்தது.
- இயற்கைப் பாதுகாப்பு நிறைந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது.
- கண்டி இராச்சியம்
    - மலைநாடு
    - மலையக அரசு
    - மலையகத்தலைநகர்
    - மகாநுவர

    போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டது.

    கண்டி இராச்சியத்திற்கு
    - மகாவலிகங்கை
    - உடவத்த மலைகள்
    - ஹந்தான மலைகள் பாதுகாப்பாக இருந்தன.
- உயரமான பிரதேசத்தில் அமைந்திருந்தமையால் தாழ்நாட்டுப் பிரதேசத்தில் இருந்து கண்டி இராச்சியத்திற்குப் பிவேசிப்பது அக்காலத்தில் சிரமமாக இருந்தது.
- பலன, உன்னஸ்கிரிய பாதைகள் ஊடாகவே கண்டி இராச்சியப் பிரதேசத்திற்கு செல்ல முடிந்தது. இவை கடினமான பாதைகளாக இருந்ததுடன் கண்டி நகருக்குப் பாதுகாப்பானதாகவும் இருந்தது.

## 2.1 கண்டி இராச்சியத்தின் ஆரம்பம்.

- கோட்டை இராச்சியத்தினை 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சி செய்த போது கண்டி இராச்சியம் அதன் ஆட்சிப் பிரதேசமாக இருந்தது.
- ஜோதிய இளவரசன் கோட்டை இராட்சிய மன்னனின் பிரதிநிதியாக இருந்தான்.
- ஜோதிய கண்டி இராச்சியத்தை சுதந்திர அரசாக மாற்றுவதற்காக 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.
- அக்கிளர்ச்சி தோல்வி அடைந்தது.
- 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின் பின் சேனாசம்மத விக்கிரமபாகு என்ற பிரதானி மலைநாட்டை தோட்டை இராச்சியத்திலிருந்து விடுவித்து தனி அரசினை உருவாக்கினான்.
- கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னன்

சேனாசம்மத விக்கிரமபாகு

↓

ஜயவீர பண்டார (சேனாசம்மத விக்கிரமபாகு மகன்)

↓

கரலியத்த பண்டார (ஜயவீர பண்டார மகன்)

- ஜயவீர பண்டார காலத்தில் கோட்டை இராச்சியம்
    - கோட்டை
    - றைகம
    - சீதவாக்கை என மூன்று இராச்சியங்களாகப் பிரிந்தது.

**போர்த்துக் கேயர்**

- 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தனர்.
- கோட்டை இராச்சியத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர்.
- கோட்டை இராச்சிய அரசியல் நடவடிக்கைகளில் தலையிட்டனர்
- கண்டு இராச்சிய ஜயவீர பண்டாரவுடன் தொடர்பை ஏற்படுத்த மயன்றனர். ஆனால் அது சாத்தியப்படவிலடலை.

**கரலியத்தபண்டார**

- ஜயவீர பண்டாரவின் மகன்
- சீதவாக்கை மன்னனின் அச்சுறுத்தலை எதிர்கொண்டான்.
- போர்த்துக்கேயருடன் நட்புடன் செயற்பட்டான்.
- மன்னன்
    - போர்த்துக் கேயருடன் நட்புடன் நடந்து கொண்டமை
    - அவர்களின் கலாசாரத்தை அனுசரித்தமை கண்டிப் பிரதானிகளுக்கு விருப்பமின்மையை ஏற்படுத்தியது.

- இதனால் மலைநாட்டுப் பிரதானி வீரசுந்தர பண்டார சீதவாக்கை ஆட்சியாளன் முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற உதவி புரிந்தான்.
- கரலியத்த பண்டார
    - மகள் - குசுமாசன தேவி
    - மருமகன் யமசிங்க பண்டார

  அரச பரிவாரங்களுடன் மன்னாருக்குத் தப்பியோடி பேர்ருத்துக்கேயரிடம் சரணடைந்தான்.

- குசுமாசன தேவி – டொனா கதறினா
  யமசிங்க பண்டார – டொன்பிலிப் என்னும் ஞானஸ்தானப் பெயர்களைப் பெற்று கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றினர்.

**சீதவாக்கை இராச்சியம் - கண்டி இராச்சிய தொடர்பு**

- 1580 இல் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றிய முதலாம் இராஜசிங்கன் சீதவாக்கையில் இருந்து கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்.
- வீரசந்தரபண்டார முதலாம் இராஜசிங்கனின் பிரதிநிதியாக கண்டி இராச்சியத்திலிருந்தான்.
- முதலாம் இராஜசிங்கனுக்கும் வீரசுந்தரபண்டாரவிற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக முதலாம் இராஜசிங்கன் வீரசுந்தரபண்டாராவைக் கொலைசெய்தான்.
- வீரசுந்தரபண்டாரவின் மகன் கோனப்பு பண்டார பாதுகாப்புக் கருதி போர்த்துக் கேயரிடம் தஞ்சமடைந்தான்.
- கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றி டொன்ஜுவான் என்ற பெயரைப் பெற்று போர்த்துக்கேயர் சார்பாகச் செயற்பட்டான்.

**கண்டி இராச்சிய அரசர்கள்**

- முதலாம் விமலதர்ம சூரியன் (1592 – 1604)
- செனரத் மன்னன் (1604 – 1635)
- 2 ஆம் இராஜசிங்கன் (1635 – 1687)
- 2 ஆம் விமலதர்ம சூரியன் (1687 – 1707)
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் ( 1707 – 1739)
- ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் ( 1739 – 1747)
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் (1747 – 1782)
- இராஜாதி இராஜசிங்க மன்னன் ( 1782 – 1798)
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் ( 1798 – 1815)

(ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் முதல் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் வரை) நாயக்க வம்சம்.

## முதலாம் விமலதர்மசூரியன் ( 1592 – 1604)

- சீதவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கன் சைவசமயத்ததைப் பின்பற்றி பௌத்த குருமாருக்கு எதிராகச் செயற்பட ஆராம்பித்தான்.
- இதனால் மலையகப் பிரதானிகளிடையே மன்னன் மீது அதிருப்தி ஏற்பட்டது.
- இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தமக்குச் சார்பானவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்கு முயற்சி செய்தனர்.
- போர்த்துக் கேயரின் பாதுகாப்பில் இருந்த கரலியத்த பண்டாரவின் மருமகனான டொன்பிலிப்பை அரசனாக்கினர். இவனது பாதுகாப்பிற்காக டொன்யுவானையும் மலைநாட்டிற்கு அனுப்பினர்.
- டொன்பிலிப் சிறிது காலத்தில் மரணமடைந்தான்.
- போர்த்துக்கேயர் டொன்பிலிப்பின் சிறுவயது மகனை அரசனாக்கி பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்க முயற்சி செய்தனர்.
- இதன் போது டொன்ஜுவான் என அழைகப்பட்ட கோனப்பு பண்டாரா போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு ஆட்சியைக் கைப்பற்றி மீண்டும் பௌத்த சமயத்திற்கு மாறினான்.
- இதனால் போர்த்துக்கேயர் கோபமடைந்தனர்.
- 1592 இல் முதலாம் விமலதர்மசூரியன் என்ற பெயரில் டொன்ஜுவான் கண்டி அரசனாக முடி சூட்டிக் கொண்டான்.

## முதலாம் விமலதர்மசூரியனின் முக்கியத்துவம்.

- 1592 – 1604 கண்டி இராச்சிய மன்னன்
- கரலியத்த பண்டாரவினுடைய மகள் டோனா கதரீனா (குசுமாசன தேவி) வைத் திருமணம் செய்தான்.
- இதன் மூலம் கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வமான அரசனாக முடிசூடிக் கொண்டான்.
- இவனால் **புதிய அரசபரம்பரை** ஒன்று கண்டியில் உருவாக்கப்பட்டது.

  - முதலாம் விமலதர்ம சூரியன்
  - செனரத் மன்னன்
  - 2 ஆம் இராஜசிங்கன்
  - 2 ஆம் விமலதர்ம சூரியன்
  - ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

  } **புதிய அரசபரம்பரை மன்னர்கள்.**

- முதலாம் விமலதர்ம சூரியன் சீதவாக்கை இராச்சியத்தின் ஆதிக்கத்திலிருந்து கண்டி இராச்சியத்தை விடுவித்துக் கொண்டான்.
- முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்த போது அதனைத் தோற்கடித்தான்.
- 1594 – தந்துரைப் போர்
- 1602 - பலனைப் போர் ஆகியவற்றில் போர்த்துக் கேயரைத் தோற்கடித்தான்.

## முதலாம்விமலதர்ம சூரியனின் பௌத்த சமயப் பணிகள்

- பர்மாவில் இருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை மீண்டும் நடத்தினான்.
- லங்காதிலக, கடலாதெனிய விகாரைகளைப் புனரமைத்தான்.
- சீதாவாக்கையின் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கண்டிக்கு எடுத்து வந்து தலதாமாளிகையில் பிரதிஸ்டை செய்தான்.

## செனரத் மன்னன்.

- முதலாம் விமலதர்மசூரியனின் ஒன்றுவிட்ட சகோதரன்

- முதலாம் விமலதர்மசூரியனின் பின் மன்னனானான்.
- யுத்தத்தைவிட சமாதானத்தை விரும்பினான்.
- 1617 இல் போர்த்துக்கேயருடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டான்.
- செனரத் காலத்தில் கப்டன் ஜெனரல் கொன்ஸ்தாந்தைன் தசா பெரும் படை ஒன்றுடன் ஊவா பிரதேசத்தை ஆக்கிரமித்தான்.
- செனரத்தின் மகன் மகா அஸ்தான குமாரன் ( 2 ஆம் இராஜசிங்கன்) தலைமையிலான படை ரந்தெனிவெல என்ற இடத்தில் போர்த்துக்கேயருடன் போரிட்டு வெற்றி பெற்றது.

### இரண்டாம் இராஜசிங்கன்

- செனரத்தின் மகன்
- மகாஇஸதான குமாரன் - இளமைக்காலப் பெயர்
- 2 ஆம் இராஜசிங்கன் - அரசனான பின் சூடிக்கொண்ட பெயர்
- இலட்சியம் - போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவது
- போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரின் உதவியைப்பெற நடவடிக்கைகளை மேற்கொண்டான்.
- 1638 ஆம் ஆண்டில் 2 ஆம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.
- இதன் படி இருவரும் ஒன்று சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்டு 1658 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்றினர்.
- கண்டி இராச்சியத்தின் ஆளுகைப் பிரதேசத்தை விஸ்தரிக்க முயற்சி செய்தான்.
- போர்த்துக்கேயரை வெளியேற்றி முழு நாட்டிற்கும் அரசனாகும் நோக்கம் அவனுக்கு இருந்தது.
- ஆனால் ஒல்லாந்தர் அப்பிரதேசங்களைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தமையால் அந்நோக்கத்தை அவனால் அடையமுடியவில்லை.
- ஆனால் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரும் பகுதியைத் தனது ஆட்சிப் பிரதேசத்துடன் இணைத்துக் கொண்டான்.
- 2 ஆம் இராஸசிங்க மன்னன் காலத்தில் தியோகு த மேலோ கஸ்ரோ என்றும் போர்த்துக்கேய கப்டன் ஜெனரல் 1638 ஆம் ஆண்டில் பெரும்படையுடன் கண்டி மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டான்.
- கன்னொருவ என்ற இடத்தில் இப்படைகளைச் சுற்றி வளைத்த 2 ஆம் இராஜசிங்கன் படை போர்த்துக்கேயப் படைகளைத் தோல்வி அடையச் செய்தது.
- 1635 இல் செனரத் மன்னன் மரணமடைந்தான். 2 ஆம் இராஜசிங்கன் மன்னனானான்.
- 1687 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்
- கண்டி இராச்சிய வரலாற்றில் அதிககாலம் ஆட்சி செய்த மன்னன் 2 ஆம் இராஜசிங்கன் ஆவான்.

### 2 ஆம் விமலதர்மசூரியன்

- 2 ஆம் இராஜசிங்கனின் மகன்
- 2 ஆம் இராஜசிங்கனுக்குப் பின் கண்டி இராச்சிய மன்னன்.
- அமைதியான ஆட்சியாளன்
- இலங்கையின் கரையோரத்தை ஆட்சி செய்த ஒல்லாந்தருடன் நட்புறவுடன் நடந்து கொண்டான்
- பௌத்த மதத்தின் வளர்ச்சிக்காகப் பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை நடத்தினான்.
- தலதாமாளிகையை மூன்று மாடிகள் கொண்டதாக அமைத்தான்.

### ஶ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்க மன்னன்.

- 2 ஆம் விமலதர்ம சூரியனின் மகன்

- 2 ஆம் விமலதர்மசூரியன் 1707 இல் மரணமடைநடததைத் தொடர்ந்து கண்டி இராச்சிய மன்னனானான்.
- பலவீனமான மன்னன்
- பிரதானிகள் அதிகாரம் பலமடைந்தது.
- தென்னிந்திய இளவரசியை மணந்து கொண்டான். ( தந்தை, பாட்டன் போல)
- இவனுக்கு வாரிசு இல்லை.
- நாயக்க வம்சத்தவர்கள் மலைநாட்டின் உரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

## ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன்

- கண்டி இராச்சியத்தின் முதலாவது நாயக்க வம்ச மன்னன்
- வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னனின் மனைவியின் (நாயக்க வம்சம்) சகோதரன்.
- இவன் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் பௌத்த சமய சேவைகளுக்கு உதவினான்.
- பர்மாவிலிருந்து பௌத்த பிக்குகளை வரவளைத்து உபசம்பதா விழா நடத்த முற்பட்ட போதும் அது நிறைவேறவில்லை.

## கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்

- ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னனின் மனைவியின் சகோதரன்
- 16 வயதில் மன்னனானான்.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரிடம் பௌத்த சமயம் பற்றிக் கற்றுக் கொண்டான்
- பௌத்த சமயம் பற்றிய அறிவு மன்னனுக்கு இருந்ததினால் கண்டி மக்கள் இவனுக்கு மரியாதை செலுத்தினர்.
- பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- கண்டி இராச்சிய வரலாற்றில் இவனுடைய காலம் முக்கியத்துவம் பெறுகின்றது.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் மன்னனுக்குத் தேவையான வழிகாட்டலை மேற்கொண்டு பௌத்த சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாகச் செயற்பட்டார்.
- ஐரோப்பியர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆட்சி செய்து யுத்த நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இருந்தனர்.
- இதனால் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் பௌத்த சமயத்தில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.
- உபசம்பதா சடங்கினை மேற்கொள்ளக் கூடிய பிக்குகள் மிகக் குறைவாக இருந்தது.
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் சரணங்க தேரரின் ஆலோசனைப் படி
    - ஒல்லாந்தரிடம் கப்பலைப் பெற்றான்.
    - சீயம் நாட்டிற்குத் தூதுக்கழுவை அனுப்பினான்.
    - உபாலிதேரர் உட்பட்ட சமய குருமாரை வரவழைத்து 1753 ஆம் ஆண்டு உபசம்பதா விழாவை நடத்தினான்.
- அன்றிலிருந்து இன்றுவரை காணப்படும் “ சியம் நிக்காய” என்னும் சமயப் பிரிவு இக்காலத்தில் ஆரம்பமானது.
- மன்னன் சரணங்கர தேரருக்கு உயர்வான “ சங்கராஜா” பதவியை வழங்கினான்.
- மலைநாட்டிலும் கரையோரப் பகுதிகளிலும் அழிவுற்றிருந்த விகாரைகளையும் தாது கோபங்களையும் புனரமைப்புச் செய்வித்தான். உதாரணம் தம்புள்ள விகாரை
- மன்னன் இந்து சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும் வருடாந்தம் பெரஹராவில் தேவாலயங்களின் பெரஹராவையும் இணைத்து வெகுசிறப்பாக நடத்தினான்.
- சரணங்க தேரரின் சமய, கல்வி நடவடிக்கைகளுக்கு உதவிபுரிந்தான்.
- கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்து வந்த ஒல்லாந்தரால் கண்டி இராச்சியத்திற்கு ஆபத்து ஏற்படலாம் எனக் கருதினான்.
- ஒல்லாந்தரை இலங்கையில் இருந்து வெளியேற்ற ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுக் கொண்டான்.

- மன்னனின் வேண்டுகோளின் படி 1762 ஆம் ஆண்டில் ஜோன் பைபஸ் என்ற ஆங்கில தூதுவன் கண்டிக்கு வருகை தந்து மன்னனைச் சந்தித்தான்
- இத்தூதினால் சாதகமான விளைவுகள் ஏற்படவில்லை.
- மன்னன் ஆங்கிலேயரின் உதவியை நாடுவதை அறிந்து ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தினர்.
- 1765 இல் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டனர்.
- ஆனால் அவர்களால் கண்டி இராச்சியத்தை கைப்பற்றுதல் என்ற நோக்கத்தினை அடைய முடியவில்லை.
- ஒல்லாந்தரிடம் இருந்து தொடர்ந்தும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வந்தமையால் நீண்ட கால சமாதானத்தை விரும்பிய மன்னன் 1766 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டான்.
- 1766 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் ஒல்லாந்தர்
    - இலங்கையின் கரையோரப் பிரதேசத்தினைக் கைப்பற்றுதல்
    - கண்டி இராச்சியம் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளையும் துண்டித்தல் ஆகிய விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டனர்.
    - ஆனால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்களை ஒல்லாந்தர் பூர்த்தி செய்யவில்லை.

**இராஜாதி இராஜசிங்க மன்னன்**

- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் சகோதரன்.
- பௌத்த சமயத்தில் பற்று மிக்கவன்
- இராஜாதி இராஜசிங்க மன்னன் காலத்தில் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர்
- 1798 இல் மரணமடைந்தான்.

**ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்.**

- இராஜாதி இராஜசிங்க மன்னனின் பின் கண்டி இராச்சிய அரசுரிமைக்காக கண்ணுச்சாமி, முத்துச்சாமி என இருவர் போட்டியிட்டனர்.
- இதில் கண்ணுச்சாமிக்கு அப்போதைய கண்டிப் பிரதம பிரதானி பிலிமத்தலாவ ஆதரவு வழங்கினான்.
- அதன்படி இளவரசன் கண்ணுச்சாமி 1798 ஆம் ஆண்டில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்னும் பெயருடன் கண்டி இராச்சியத்தின் அரசனானான்.
- இளவரசன் முத்துச்சாமி பாதுகாப்புக் கருதி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தான்.
- பிலிமத்தலாவை - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் எனக் கருதினார்.
- ஆனால் மன்னன் ஆரம்பத்தில் பிலிமத்தலாவையின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டாலும், பின் உறவினர்களிற்குக் கட்டுப்பட்டு நடந்தான்.
- இதனால் மன்னனுக்கும் பிலிமத்தலாவைக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.
- பிலிமத்தலாவ ஆங்கிலேயரின் உதவியைப் பெற்று மன்னனுக்கு எதிராகச் செயற்படும் முயற்சியில் ஈடுபட்டாலும் அது தோல்வி அடைந்தது.
- கண்டி இராச்சியத்தை ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் ஆட்சி செய்யும் போது இலங்கையின் கரையோரத்தில் பிரித்தானியரின் முதலாவது ஆளுனரான பிறட்டிக் நோர்த் ஆட்சி செய்தார்.
- ஆளுனர் நோர்த்திற்கு
    - கண்டி இராச்சியத்தின் போர் ஆற்றல்
    - போர் முறைகள்
    பற்றி போதிய அறிவு இருக்கவில்லை.

- 1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்த பிரட்டிக் நோர்த் தமது பாதுகாப்பில் இருந்த முதுதுச் சாமியை அரசனாகப் பிரகடனப்படுத்தினார்.
- எனினும் பொது மக்களுடைய ஆதரவு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனுக்குக் கிடைத்தமைபால் அவ் ஆக்கிரமிப்பு வெற்றி பெறவில்லை.
- மீண்டும் ஆட்சியைப் பெற்ற மன்னன் முத்துச்சாமிக்கு மரண தண்டனை விதித்தான்.

### ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் பணிகள்

- 1798 – 1815 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்.
- தலதாமாளிகைக்கு மனங்கவரும் பத்திரிப்பு என அழைக்கப்படும். எண்கோண மண்டபத்தினைக் கட்டினான்.
- தலதா மாளிகைக்கு முன்னால் பாற்கடல் என அழைக்கப்படும் தடாகத்தை நிர்மாணித்தான்.

### பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குக் காரணமான நிகழ்வுகள்

- மன்னனின் இறுதிக் காலத்தில் கண்டி இராச்சியத்தில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை இதனால்
    - மன்னனுக்கும் - பிரதானிகளுக்கும்
    - மன்னனுக்கும் - குடிமக்களுக்கும்

  இடையில் இருந்த நல்லுறவு சீர்குலைந்தது.
- கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானியான எஹலப் பொலைக்கும் மன்னனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.
- எஹலப்பொல ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்திருந்தான்.
- கண்டி இராச்சியத்தில் மன்னனுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது.
- இதனைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேய ஆளுனர் ரொபட்பிரவுண்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.
- ஆங்கிலேயருக்கு எஹலப் பொலையின் உதவி கிடைத்தமை.
- மன்னன் ஆட்சியில் அதிருப்தி அடைந்திருந்த மக்கள் ஆங்கிலேயர் கண்டிக்கு வருவதனைத் தடுக்கவில்லை.
- இதனால் தடைகள் இன்றிக் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டது.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அரண்மனையில் இருந்து மெதகமறு வரை சென்று வீடு ஒன்றில் ஒழித்திருந்தான்.
- கண்டி இராச்சிய மக்கள் மன்னனை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.
- இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களால் கைப்பற்ற முடியாதிருந்த கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியமைக்கு மக்களின் உதவியே காரணமாக அமைந்திருந்தது.
- “ கண்டி ஒப்பந்தம்” 1815 மார்ச் 2 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.
- ஒப்பந்தத்தின் படி கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டது என ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் உட்பட நாயக்க வம்சத்தினருக்கு கண்டி இராச்சியத்தின் மீதிருந்த உரிமைகள் இல்லாது செய்யப்பட்டது.
- கண்டி இராச்சியத்தின் சுதந்திரம் இல்லாது போனது.
- முழு இலங்கைத் தீவும் பிரித்தானியரின் கீழ் குடியேற்ற நாடானது.
- பிரித்தானியரால் கைதுசெய்யப்பட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் ஆங்கிலேயரால் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான்.

### கண்டி இராச்சியத்தின் பொருளாதார முறை

- கண்டி இராச்சியத்தின் பொருளாதாரம்
    - விவசாயம்
    - வர்த்தகம்
    - கைத்தொழில் ஆகிய மூன்று துறைகளை உள்ளடக்கியது.

- சுயதேவைப் பொருளாதாரம் காணப்பட்டது.

**விவசாயம்**

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை
- கண்டி இராச்சிய காலத்தில் ஈரவலயப் பிரதேசங்களில் வேகமான சனத்தொகை வளர்ச்சி காணப்பட்டது.
- வருடம் முழுவதும் இப்பிரதேசத்தில் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றமையால் உலர்வலயத்தைப் போல
    - குளங்கள்
    - அணைக்கட்டுக்கள் கட்டி நீரைத்தேக்கி வைத்துக் கொள்ளும் தேவை ஏற்படவில்லை.
- உயர் மலைப்பிரதேசங்களில் படிக்கட்டு முறையில் அமைக்கப்பட்ட வயல்களில் மழைநீரினைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவது பொதுவான தன்மையாக இருந்தது. தாழ்நிலப் பிரதேசங்களிலும் மழைவீழ்ச்சியைப் பயன்படுத்தி நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- சேனைப் பயிர்ச்செய்கையில்
    - குரக்கன்
    - எள்
    - இறுங்கு
    - திணை

    போன்றன பயிரிடப்பட்டன.

- பலாக்காய்
- கிழங்கு வகை
- பழவகைகள்
- மிளகு
- சாதிக்காய்
- ஈரப்பலாக்காய்
- மரக்கறிகள்
- பாக்கு
- ஏலம்
- கராம்பு

போன்றன வீட்டுத் தோட்டச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

- பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவும், விவசாயம், போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகவும் மாடுகள் வளர்க்கப்பட்டன.

**வர்த்தகம்**

- உள்நாட்டு வியாபாரம்
- வெளிநாட்டு வியாபாரம் இடம் பெற்றது.
- கரையோரப் பிரதேச உற்பத்திகள் மலையகப் பிரதேசங்களிலும் மலையகப் பிரதேச உற்பத்திகள் கரையோரப் பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டன.
- வர்த்தகத்தில் நாணயப் பரிமாற்றம், பண்டமாற்று முறை ஆகியன நடைமுறையில் இருந்தன.
- மலைநாட்டிற்கும் தாழ்நிலப்பகுதிகளுக்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த கடவைகளின் ஊடாக வர்த்தகப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டது.
- கடவை என்பது கண்டி இராச்சிய எல்லைக்கும் ஒல்லாந்தரின் ஆட்சி எல்லைக்கும் இடையில் காணப்பட்ட காவல் நிலையங்கள்
- கண்டி இராச்சியத்தில் வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் ஏகபோக உரிமையாக இருந்தது.
- கரையோரத்தில் ஆட்சி செய்த ஐரோப்பியருடன் அரசன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தான்.
- இந்தியாவிற்கும் கண்டி இராச்சியத்திற்கும் இடையிலும் வர்த்தகம் இடம்பெற்று வந்தது.

| கண்டி இராச்சிய ஏற்றுமதிப் பொருட்கள் | கண்டி இராச்சிய இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| ▪ கறுவா | ▪ குதிரை |
| ▪ மிளகு | ▪ புடவை |
| ▪ பாக்கு | ▪ மட்பாண்டம் |

| | |
|---|---|
| ▪ யானை, யானைத் தந்தம் | ▪ பீங்கான் பாத்திரங்கள் |
| ▪ தேன் | ▪ வாசனைப் பொருட்கள் |
| ▪ முத்து, மாணிக்கம் | ▪ கருவாடு |
| ▪ வெற்றிலை | |
| ▪ ஏலம் | |
| ▪ கராம்பு | |
| ▪ தேன்மெழுகு | |
| ▪ சாதிக்காய் | |

**கைத்தொழில்கள்**

- நாட்டின் தேவைக்கான கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளப்பட்டன.
- குலத்தை அடிப்படையாகக் கொண்ட பரம்பரைத் தொழில் புரிவோர் காணப்பட்டனர்.
    - களிமண்பொருட்கள்
    - செம்பு
    - பித்தளை
    - இரும்பு

    உலோகங்களினால் பல்வேறு பொருட்கள், உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- கைத்தொழில்களின் அடிப்படையில் கிராமங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.
- அக் குழுக்களுக்குத் தலைமை தாங்குவோரும் இருந்தனர்.
- உற்பத்திப் பொருட்களை மெருகேற்றுவதற்கு அரக்கை உற்பத்தி செய்தனர்.

**கைத்தொழில்களும் உற்பத்திப் பிரதேசங்களும்**

- கொத்மலைப் பிரதேசம் - இரும்பு உற்பத்தி
- கிரிவவுலப் பிரதேசம் - செம்பு உற்பத்தி
- தும்பறைப் பிரதேசம் - பன்புல்லினால் இழைக்கும் பொருட்கள்.

**கண்டி இராச்சிய சமூக அமைப்பு**

- கிராமிய சமூகம்
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம்
- தொழில்பிரிவினர், குலங்களுக்கு எனக் கிராமங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- குடிமக்களில் அதிகமானவர் - விவசாயிகள்
- கிராமத்தில் ஏனைய தொழில் புரிபவர்களுடன் நல்லறவு காணப்பட்டது.
- ஒன்று பட்ட புரிந்துணர்வுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு நிலவியது.
- சமூகத்தில்
    - மதகுருமார்
    - பிரபுக்கள்
    - குடிமக்கள்

    என மூன்று வகுப்புக்கள் காணப்பட்டது.
- பிரப்புக்கள் சமூகத்தில் முக்கியமான சக்தியாக இருந்தனர்.
- அரசனைத் தவிர நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் - பிரதானிகள்
- பிரதானிகள் - பிரபுக்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.
- சாதாரண மக்களிடையே

- விவசாயிகள்
- தொழிலாளர்கள்
- வியாபாரிகள் போன்ற தொழில்களில் ஈடுபட்டவர்களும் உள்ளடங்குவர்.

- மலையக சமூகத்தில் குடும்ப அலகு மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது.
- தந்தையின் பின் சொத்துக்கள் பிள்ளைகளுக்குச் சொந்தமாகும்.
- தந்தையை முதன்மையாகக் கொண்ட தந்தை வழிச் சமூகம் காணப்பட்டது.

**கண்டி சமூகத்தின் திருமண முறைகள்**

- தீக திருமணம்
  - மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே வாழ்வது
- பின்ன திருமணம்
  - மணமகன் மணமகளின் வீட்டில் தங்கியிருந்து வாழ்வது
- இவற்றை விட சகோதரர்கள் சிலர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழும் முறை மிகக் குறைந்த அளவில் இருந்தது.
- விவசாய சமூகத்தில் சொத்துக்கள் பிரிக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்கு இவ்வாறான திருமண முறை வழக்கத்திலிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

**கண்டி இராச்சிய கட்டடக்கலை நுட்பங்கள்**

கம்பளை

- கோட்டை இராச்சிய காலங்களில் நிலவிய கட்டடக்கலை முறை கண்டி இராச்சிய காலத்திலும் பேணப்பட்டு வந்தது.
- கண்டி கால சமய ரீதியான கட்டடங்கள்
  - தலதாமாளிகை
  - எம்பக்க தேவாலயம்
  - லங்காதிலக விகாரை
  - இந்துக் கோவில்கள்
- கண்டி இராச்சிய காலத்தில் தூண்களின் மீது விகாரைகள் அமைக்கப்படும் மரபு ஒன்று இருந்து வந்தது.
- நிலத்தின் மீது மரத்தூண்களை நட்டு அதன் மீது கட்டடத்தைக் கட்டுவர்.
- இவ்வாறு அமைக்கப்படும் விகாரை ‘இவ்’ விகாரை எனப்படும்.
- கறையான் போன்றவை மரத்தூண்களை அரித்து கட்டடம் சிதைவுறுவதனைத் தவிர்ப்பதற்காக மண்ணின் மீது கற்றூண்களை நட்டு அவற்றுடன் மரத்தூண்களைப் பொருத்தி இவ்விகாரை கட்டப்பட்டது.
- மெதவலையில் உள்ள டெம்பிட விகாரை இவ்வாறு அமைக்கப்பட்டதாகும்.

**கண்டி இராச்சிய ஓவியக்கலையின் சிறப்புக்கள்**

- கற்றவர்கள், கல்வி அறிவு அற்றவர்கள் அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஓவியங்கள் வரையப்பட்டன.
- சுவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து நீண்ட கதைகளைப் படி முறையாக முன்வைக்கும் ஓவியங்கள் வரையப்பட்டன.
- ஒவ்வொரு ஓவியச் சட்டத்தின் கீழும் கதையம்சங்கள் சுருக்கமாகப் பெயரிடப்பட்டுள்ளமை.
- வெற்றிடங்களை நிரம்புவதற்கு மலர்கள் வரையப்பட்டுள்ளமை.
- மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள் ஆகிய உருவங்களில் சரியான அளவீடு பேணப்பட்டமை.
- தாவரங்கள், கனியங்கள் ஆகியவற்றிலிருந்து நிறங்கள் தயாரிக்கப் பட்டிருந்தமையையும் காணக் கூடியதாக இருந்தமை.
- வெஸ்ஸந்தர

- தேலபத்த
- தஹமபொத ஆகிய ஜாதக நூல்களில் இருந்து பெறப்பட்ட ஜாதகக் கதைகளை ஓவியங்களாக வரைந்திருந்தமை.
- இன்று
    - தம்புள்ள
    - தெகல்தொருவ
    - தலதாமாளிகை
    - முல்கிரிகல     கண்டி கால ஓவியங்களைக் காணலாம்.

# வரலாறு

# தரம் 8 அலகு 3 ஐரோப்பிய மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்பது

பண்டைய கிரேக்க, உரோம நாகரிகத்தில் நிலவிய சிந்தனைகள் மீண்டும் வெளிக்கொணரப்படுதல் எனக் குறிப்பிடலாம்.

- 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில்
    - கல்வி
    - சமயம்
    - விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

மறுமலர்ச்சியின் பின்னணி

- ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி முதன் முதலில் இத்தாலியில் ஏற்பட்டது.
- இது உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
- கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உரோம நாகரிகம் வீழ்ச்சியடைந்ததும் ஐரோப்பாவில் நிலவி வந்த புராதன யுகம் முடிவுற்றது.
- அதன் பின்னரான 1000 ஆண்டுகள் ( கி.பி 500 – 1500) ஐரோப்பாவின் மத்திய காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது.
- மத்திய காலத்தின் இறுதியில் ஐரோப்பியரிடையே பண்டைய
    - கிரேக்க
    - உரோம நாகரிகம் தொடர்பாக அதிக ஆர்வம் ஏற்பட்டது. இதனால்
- கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பான நூல்களைக் கற்றல்
- அந்நாகரிகங்களுடன் தொடர்புடைய கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்றல் என்பவற்றில் ஐரோப்பியர் ஈடுபட்டனர்.
- இதன் மூலம் கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பான விடயங்களை ஆழமாகக் கற்றதுடன் அவற்றில் காணப்பட்ட பண்பாட்டம்சங்கள் மீண்டும் ஐரோப்பிய மக்களைக் கவர்ந்தது.
- ஐரோப்பிய மக்களின் இச் சிந்தனை மாற்றம் கிரேக்க, உரோம நாகரிகம் மீண்டும் எழுச்சி பெற வழிவகுத்தது. இதனை அறிமுகம் செய்யவே மறுமலர்ச்சி என்ற பதம் பயன்படத்தப்பட்டது.

**மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள்**

- கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியரால் கைப்பற்றப்படுதல்
- வர்த்தகம் வளர்ச்சியடைதலும் செல்வந்த வர்க்கம் தோற்றம் பெறுதலும்.
- கல்வி மறுமலர்ச்சி

**கொன்ஸ்தாந்தி நோபிள் நகர் துருக்கியரால் கைப்பற்றப்படல்.**

- பழங்காலம் தொடக்கம் ஐரோப்பாவுக்கும் ஆசியாவிற்குமிடையே வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது.
- பாரம்பரிய வர்த்தகப் பாதையூடாக ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பொருட்களை விற்கும் மத்திய நிலையமாக கொன்ஸ்தாந்தி நோபிள் விளங்கியது.
- ஐரோப்பிய வர்த்தகர்கள் அங்கு வந்து வர்த்தகப் பொருட்களைப் பெற்று ஐரோப்பிய நாடுகளில் விற்று இலாபம் அடைந்தனர்.
- கி.பி. 1453 ஆம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியர் கொன்ஸ்தாந்தி நோபிளைக் கைப்பற்றியதால் ஐரோப்பிய வர்த்தகம் பெரும் சவாலை எதிர்நோக்கியது.

- இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.
- இஸ்லாமியரான துருக்கியர்களால் கொன்ஸ்தாந்தி நோபிள் கைப்பற்றப்பட்ட பின் ஐரோப்பிய வர்த்தகர்களில் தொடர்ந்தும் அதனை வர்த்தக மத்திய நிலையமாகப் பயன்படுத்த முடியாது போனது.
- அதனால் அங்கிருந்த அறிஞர்கள் கொன்ஸ்தாந்தி நோபிள் நூலகங்களிலிருந்த பெறுமதி வாய்ந்த
    - கிரேக்க
    - உரோம நூல்களை எடுத்தக் கொண்டு தமது நாடுகளுக்குச் சென்றனர்.
- அந்நூல்களைக் கற்பதற்கு அவசியமான கிரேக்க, இலத்தீன மொழிகளைப் பிரபல்யம் அடையச் செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- இத்தாலியின்
    - பீசா
    - பொலொஞ்ஞோ பல்கலைக் கழகங்களில் இந்நூல்கள் ஆழமாகக் கற்கப்பட்டதுடன் பண்டைய கிரேக்க, உரோம பண்பாடு மீண்டும் புத்துயிர் பெற்றது.

### வர்த்தகம் வளர்ச்சியடைதலும் செல்வந்த வர்த்தகம் தோற்றம் பெறுதலும்

- கி.பி 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் ஐரோப்பாவில் வர்த்தகம் தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றம் மறுமலர்ச்சியில் தாக்கம் செலுத்திய நீண்டகாலக் காரணியாகும்.
- இக்காலத்தில் கிழக்கு – மேற்கு வர்த்தகத்தினால் இத்தாலியில்
    - வெனிஸ்
    - ஜெனோவா
    - புளோரன்ஸ்

  ஆகிய வளர்ச்சியடைந்த நகரங்கள் உருவாக்கப்பட்டன.
- இந்நகரங்களில் வாழ்ந்த செல்வந்தர்கள் கலைகளில் நாட்டம் கொள்வதற்கு ஓய்வு நேரம் இருந்ததுடன் அவற்றிற்கு அனுசரணை வழங்குவதற்கான செல்வமும் இருந்தது.
- மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு இச் செல்வந்தர்கள் முக்கிய காரணமாக இருந்தனர்.
- புளோரன்ஸ் நகரிலிருந்த மெடிசி குடும்பத்தினர் கலைகளின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த செல்வந்த குடும்பமாகும்.

**கல்வி மறுமலர்ச்சி**

- உரோம நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்
    - திருச்சபை
    - குருமாரை மையமாகக் கொண்ட கல்வி முறை நிலவியது. அங்கு
        - இறையியல்
        - மெய்யியல்
        - சட்டம் போன்ற சில பாடங்களே கற்பிக்கப்பட்டது.
- 12 ஆம் நூற்றாண்டின் பின் ஐரோப்பாவில் பல்கலைக் கழகங்கள் தோற்றம் பெற்றது.
    - இத்தாலி – பொலஞ்ஞோ, பாதுவா
    - பிரான்ஸ் - பரீஸ்
    - இங்கிலாந்து – ஒக்ஸ்போட், கேம்பிரிஜ்
- இப் பல்கலைக் கழகங்களில் பண்டைய
    - இலக்கியம்
    - வரலாறு
    - நாடகம் போன்ற பல பாடங்கள் கற்பிக்கப்பட்டன.
- இதனால் கல்விமான்கள் பலர் உருவாக்கப்பட்டனர்

- ஆய்வு நடவடிக்கைகளுக்கு கிரேக்க, உரோம நூல்கள் பயன்படுத்தப்பட்டதுடன் பண்டைய இலக்கியங்களுக்கு சிறப்பிடம் வழங்கப்பட்டது.
- இதனால் கிரேக்க, உரோம விஞ்ஞான கலை அறிவுகளில் புத்தெழுச்சி ஏற்பட்டது.
- பல்கலைக் கழகங்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான நூல்கள் கைகளாலேயே பிரதி பண்ணப்பட்டன. இதனால் கல்வி குறிப்பிட்ட சிலரிடமே மட்டுப் படுத்தப்பட்டிருந்ததுடன் அறிவு வளர்ச்சியில் பின்னடைவும் ஏற்பட்டிருந்தது.
- மறுமலர்ச்சிக் காலத்தில் ஜொஹன்னஸ் கூடன் பேர்க் அச்சு இயந்திரந்தைக் கண்டு பிடித்ததால் அறிவுத் துறையில் புரட்சி ஏற்பட்டது.
- ஒருநூலிலிருந்து பல்லாயிரம் பிரதிகளை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது.
- அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது.

## 3.2 மறுமலர்ச்சி ஏற்படுதல்

### புதிய கல்விமான்கள் உருவாதல்

- மறுமலர்ச்சிக்கு முன் ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு நாட்டிற்கும், பிரதேசத்திற்கும் உரிய மொழிகள் காணப்பட்டன.
- மறுமலர்ச்சிக் காலத்தில்
    - கிரேக்க
    - இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்ட நூல்களில் பாவனை அதிகரித்தால் அம்மொழிகளில் புத்தெழுச்சி ஏற்பட்டது.
- அத்துடன் கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்பது நாகரிகமாகக் கருதப்பட்டதுடன்
- இம் மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களைக் கற்பதும் பரவலடைந்தது.
- இதனால் பல கல்வி மான்கள் தோன்றினர். குறிப்பாக
    - தாந்தே இத்தாலி
    - வில்லியம் ஷேக்ஸ்பியர் - இங்கிலாந்து
    - இராஸ்மஸ் - பிரான்சு

| மறுமலர்ச்சிக்கு முற்பட்டகால கலைப் பண்புகள் | மறுமலர்ச்சிக் கால கலைப் பண்புகள் |
|---|---|
| சமயம் சார்ந்ததாக இருந்தமை | உலகியல் விடயங்கள் முதலிடம் பெற்றமை |
| கிறிஸ்துநாதர், கன்னிமரியாள் பிரசித்தி பெற்ற புனிதர்கள் கலையாக்கங்களின் பொருளாக அமைந்தமை | அரசர்கள், அரசிகள், இளவரசர்கள், இளவரசிகள், செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்தோர் கலையாக்கப் பொருளாக அமைந்தமை |
| கலைஞர்கள் வகுப்பு ரீயாகத் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டனர். கலைப்படைப்புக்கள் அந்த வகுப்பினரின் பெயரால் அழைக்கப்பட்டமை | படைப்பாளியின் பெயரால் படைப்புக்கள் வெளி வந்தமை. |
| திருச்சபை மட்டும் கலைப் படைப்புக்களுக்கு அனுசரணை வழங்கியமை. | செல்வந்தர்களது அனுசரணை கிடைக்கப் பெற்றமை |
| சமயப்பற்றை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாக இருந்தது. | இரசனையை ஏற்படுத்துவது முக்கிய நோக்கம் |
| சுதந்திரமான படைப்புக்களுக்கு இடமில்லாதிருந்தமை | சுதந்திரமாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தும் படைப்புக்கள் வெளிவந்தமை |

### மானிடவாதம் எழுச்சி பெறல்

- மறுமலர்ச்சிக்கு முன் அனைத்தையும் விட கடவுளே மேலானவர் என்ற எண்ணக்கரு நிலவியது.
- இது தெய்வீகக் கோட்பாடு எனக் குறிப்பிடப்பட்டது.

- மறுமலர்ச்சிக் காலத்தில் மனிதனின் நடவடிக்கை தொடர்பாக அதிகமாகக் கண்டறியப்பட்டதுடன் அதன் மூலம் மானிடவாதம் என்னும் எண்ணக்கரு பரவலடைந்தது.
- வரலாறு கலை போன்ற பல துறைகள் தோற்றம் பெற்றன.
- கல்வி சமயத்தைப் பரப்புவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது மனிதனையும் மக்கள் வாழ்க்கையையும் பற்றி அறியவும் பயன்படுத்தப்பட்டது.

**சித்திரக்கலை**

- பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டது.
- இத்தாலியின் புளோரன்ஸ் நகர் புதிய கலைகள் உருவாகும் மத்திய நிலையமாக வளர்ச்சியடைந்தது.
- கிறிஸ்துநாதர், கன்னிமரியாள் போன்றோரைக் கருப்பொருளாக வைத்து வடிவமைக்கப்பட்ட சித்திரங்களுக்குப் பதிலாக லௌகீகத்திற்கு முக்கியத்துவம் அளித்து சித்திரங்கள் வடிவமைக்கப்பட்டன.

**லியனாடோ டாவின்சி**

தாய்நாடு இத்தாலி

- சித்திரக் கலைஞர்
- கட்டடக் கலைஞர்
- பொறியியலாளர்
- கவிஞர்
- இசையமைப்பாளர்
    - மோனாலிசா
    - இயேசு நாதரின் இறுதி இராப்போசனம்

  இவரது சிறந்த கலைப் படைப்புக்களாகும்.

**மைக்கல் ஆஞ்சலோ**

- சிறந்த ஓவியர்
- சிற்பக்கலைஞர்
- கட்டடக்கலைஞர்
    - உரோமில் சிஸ்டைன் ஆலயப் பாவுகை ஓவியம்
    - இறுதித் தீர்ப்பு இவரது சிறந்த ஓவியங்களாகும்.

**சிற்பக்கலை**

- மறுமலர்ச்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தது.
- பளிங்குக் கற்களில் சிலைகள் செதுக்குதல் இக்காலகட்டத்தில் காணப்பட்ட சிறப்பு
- மைக்கல் ஆஞ்சலோ மிகச்சிறந்த சிற்பி
    - பியெட்டாசிலை
    - டேவிட் சிலை
    - மோஸசின் சிலை சிறந்த படைப்புக்களாகும்.
- டொனெடாலோ - மறுமலர்ச்சிக்கால சிற்பி
    - புளோரனஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள புனித யோவானின் (ஜோன்) உருவச்சிலை இவரால் அமைக்கப்பட்ட சிறந்த படைப்பாகும்.

**கட்டடக்கலை**

- இக்கால கட்டடக் கலையின் அமைப்பில் பண்டைய உரோமக்கலையின் சில பண்புகள் பின்பற்றப்பட்டுள்ளன. உரோமக் கட்டடக் கலையில் காணப்பட்ட
    - வட்டமான வில் வளைவு
    - உயர்ந்த கோபுரம்
    - அரைவட்டத்துடனான சிகரம் என்பவற்றுடன் கூடிய கட்டடங்கள் இக்காலத்தில் நிறுவப்பட்டன. இக்கால சிறந்த கலைப்படைப்பு
    - உரோமில் அமைக்கப்பட்ட புனிதபேதுருவின் ஆலயம்
- சிறந்த கட்டடக் கலைஞர்களான
    - மைக்கல் அஞ்சலோ
    - ரபாயேல் அகியோரின் படைப்புக்கள் பல இங்கு காணப்படுகின்றன.

**புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்**

- ஐரோப்பாவில் இருந்த கல்விமான்கள்
    - பண்டைய வரலாறு
    - இலக்கியம்
    - மெய்யியல் போன்ற விடயங்களை ஆழமாகக் கற்றதன் விளைவாக சமுதாயத்தில் புரட்சிகரமான அறிவு மாற்றம் ஏற்பட்டது.
- இதனால் முடிவுகள் பல விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்க முற்பட்டனர்
- அது விஞ்ஞானத்துறையின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்ததுடன் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும் ஏற்பட வழிவகுத்தது.

**வைத்தியத்துறையின் முன்னேற்றம்**

**வில்லியம் ஹார்வி -**

- மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் பற்றிக் கண்டறிந்தார்

**பெரசலஸ்**

- நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்
- அவற்றைக் குணமாக்கும் வழிவகை
- இவரது கண்டுபிடிப்புக்கள் நவீன மருத்துவ விஞ்ஞான முன்னேற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

**மைக்கல் சர்டேஸ்**

- மனித உடலின் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு நுரையீரலில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் பரவிச் செல்கின்றது என்பதனைக் கண்டறிந்தார்.

**புவி தொடர்பாக முன்வைக்கப்பட்ட புதிய கொள்கைகள்**

**நிக்கலஸ் கொப்பர்னிகஸ்**

- புவி கோளவடிவமானது
- புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி வலம்வருகின்றது.
- இதன்படி புவி தட்டையானது என்று கூறப்பட்டுவந்த எண்ணக்கரு இல்லாது போனது.
- கொப்பர் நிக்கஸின் இப்புதிய கண்டு பிடிப்பு

- நட்சத்திரங்கள்
- கோள்கள்

  தொடர்பான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு வழிவகுத்தது.

- வானியல் விஞ்ஞானத்திற்கு இவர் ஆற்றிய சேவையால் **வானியல் விஞ்ஞானத்தின் தந்தை** என அழைக்கப்படுகின்றார்.

**ஜொஹென்னஸ் கெப்லர்**

- கொப்பனிக்கஸ் முன்வைத்த கருத்துக்களை இவர் உறுதிப்படுத்தியதுடன் மேலும் முன்னெடுத்துச் சென்றார்.
- புவி உட்பட ஏனைய கோள்கள் அனைத்தும் சூரியனை வட்டவடிவமான பாதையில் சுற்றிவருவதாக இருந்துவந்த கருத்தினை மறுத்தார்.
- கோள்மண்டலத்தில் அனைத்துக் கோள்களும் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருவதாகக் கூறினார்

**கலிலியோ கலிலி**

- பல்கலைக்கழக பேராசிரியர்
- தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்
- வானியல் ஆராச்சியில் ஈடுபட்டார்
  - சந்திரனில் மலைகளும், பெருங்குழிகளும் உள்ளன என்றும்
  - சூரியனில் புள்ளிகள் உள்ளன என்றும்
  - வியாழனுக்குத் துணைக் கோள்கள் உள்ளன என்றும் அவர் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

**மதச்சீர்திருத்தம்**

- திருச்சபைக்கு எதிராகச் செயற்பட்ட குழுவினர் புரட்டஸ்தாந்தர் என அழைக்கப்பட்டனர்
- திருச்சபைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டவர்கள்
  - இங்கிலாந்தின் - ஜோன் வைக்ளிப்
  - பிரான்சின் - இராஸ்மஸ்
- திருச்சபைக்கு எதிராகச் செயற்பட்ட சீர்திருத்த இயக்கங்களுக்கு முன்னின்று செயற்பட்ட தலைவர்கள்
  - மாட்டின் லூதர்
  - ஜோன்கல்வின்

**மாட்டின் லூதர்**

- ஜேர்மனியில் பிறந்தார்
- விற்றன் பேர்க் கல்கலைக் கழக பேராசிரியர்
- திருச்சபையின் கொள்கைகளில் விவிலியப் படிப்பினைக்கு மாறான பல விடயங்கள் உள்ளன எனக் கூறினார்.
- ஜேர்மனியில் விற்றன்பேர்க் நகரில் பாவமன்னிப்புப் பத்திரம் விற்கும் குருவானவரைச் சந்தித்தார்.
- பாவமன்னிப்பு பத்திர விற்பனையில் அதிர்ச்சியடைந்த மாட்டின்லூதர் பாவமன்னிப்புத் தொடர்பாக தனது கருத்துக்கள் உள்ளடங்கிய பத்திரமொன்றைத் விற்றன் பேர்க் ஆலயத்தின் கதவில் ஒட்டினார்.

- இதனால் மாட்டின் லூதர் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டார்.
- அதன்பின் லூதர் திருச்சபையின் கொள்கைகளுக்கு எதிரான கருத்துக்களை மேலும் முன்வைத்தார்
- 15 ஆம் நூற்றாண்டில் அச்சியத்திரம் கண்டு பிடிக்கப்பட்டதுடன் லூதரின் கருத்துக்கள் ஜேர்மனியில் மட்டுமன்றி ஐரோப்பா முழுவதும் பரவியது.
- லூதரின் கருத்துக்கள் உள்ளடங்கிய இச் சீர்திருத்தம் ''புரட்டஸ்தாந்து சீர்திருத்தம்'' எனப்பட்டது.


இலங்கையின் மாகாணங்கள்
வடமாகாணம்
வடமத்திய மாகாணம்
வடமேல்
மாகாணம்
கிழக்கு
மாகாணம்
மத்திய
மாகாணம்
மேல்
மாகாணம்
ஊவா மாகாணம்
சப்பிரகமுவ
மாகாணம்
தென்
மாகாணம்

# கண்டி இராட்சியம் 1658 -1815



## கண்டி இராட்சியத்தின் மாகாணப் பிரிவுகள்



## அலகு 8.2 கண்டி இராச்சியம்



அலகு 8.2 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் கால கண்டி இராச்சியம்



அலகு 8.2 பிரடிக் நோர்த காலம் - கண்டி இராட்சியம்



## கண்டி இராட்சியம் - 2 ஆம் இராஜசிங்கன் காலம்



அலகு 8.1 இலங்கையின் பாரம்பரிய தொழில்நுட்பமும் கலைகளும்



## அலகு 8.2 கண்டி இராச்சியம்



# அலகு 8.3 ஐரோப்பிய மறுமலர்ச்சி



# அலகு 8.3 ஐரோப்பிய மறுமலர்ச்சி

